# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## **ஆணை நாள். 08.07.2026**

## **முன்னிலை**

## **திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1079/F/2023**

திரு.கோ.இராமன் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
வருவாய் வட்டாட்சியர்,
வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606202. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.கோ.இராமன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.ஆர்.ராஜலட்சுமி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 14.11.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் தியாகதுருகம் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் இருந்து சென்னை செல்லும் சாலையில் வசந்தம் ஹோட்டல் வரை சாலையின் இருபுறம் வடக்கு தெற்கு பேருந்து நிலையத்தில் இருந்து சேலம் சாலையில் பைபாஸ் தொடங்கும் வரையும் இரு புறம் வடக்கு தெற்கு பேருந்து நிலையத்தில் இருந்து திருக்கோவிலூர் செல்லும் சாலை இருபுறம் கிழக்கு மேற்கு வடதொரசலூர் முடியும், புக்குளம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து, புக்குளம் செல்லும் சாலையில் மேற்கு கிழக்கு புக்குளம் கிராமம் முடியும் வரை உள்ள வீடுகள், கடைகள், வணிக வளாகங்கள் தங்கும் விடுதிகள், பள்ளிகள், அரசு மற்றும் தனியார் கட்டிடங்கள், ஆகியோர்கள் சாலையை ஆக்கிரமித்து கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது என்றும் ஆகவே கள்ளக்குறிச்சி வட்டாட்சியர்

அலுவலகத்தில் உள்ள (புத்தகம்) அ-பதிவேடு, புல பட நகல்கள் என்பன போன்ற 2 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3.அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என மனுதாரர் 28.12.2022 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னர் பொதுத்தகவல் அலுவலர் 02.02.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் 16.03.2023 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு (08.07.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் 14.11.2022 நாளிட்ட மனுவிற்கு 30.05.2023 நாளிட்ட கடிதத்தின் வழியாக தகவல் வழங்கியுள்ளதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் மனுதாரர் 04.07.2026 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிற்குரிய தகவல் முழுவதுமாக 12.01.2023 அன்று கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலக பொதுத்தகவல் அலுவலர் அவர்களிடமிருந்து தகவல்களை மனநிறைவுடன் முழுமையாக பெற்றுக்கொண்டதாகவும் மனநிறைவு கடிதம் வழங்கியுள்ளதாக கூறி அதற்கான ஆவணத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை உறுதி செய்தும் மற்றும் மனுதாரர் தகவலை முழுமையாக பெற்றுக்கொண்டதாக மனநிறைவு கடிதம் வழங்கியுள்ளதை கருத்தில் கொண்டும் இவ்வாணையம் இப்புகார் மனுவின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 1079/F/2023**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத்தகவல் அலுவலர் /
வருவாய் வட்டாட்சியர்,
வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606202.

**<u>மனுதாரர்</u>**

திரு.கோ.இராமன்,
கிழக்கு தெரு,
பல்லகச்சேரி அஞ்சல்,
சங்கராபுரம் வட்டம்,
கள்ளக்குறிச்சி-606206.

Copy to file: KR/PA